UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1981 -5- 27
PERIODICALS
LIBRARY

**Editor's Note**

Please address all communication for the English pages **to The English Editor,** 'Morning Star' UDUVIL, CHUNNAKAM.

# THE MORNING STAR

*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. Q B / 100125 / 81*

Established: 1841 : A Christian Weekly : Published Every Friday

Vol. 141 JAFFNA, FRIDAY, 8TH MAY, 1981 No. 19

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE

**Subscription**

Inland: Rs. [illegible] per year.

Single issues are available at the VARANY MISSION SALES CENTRE, Model Market, Jaffna at Re. 1/- per copy.

*Apply to:*

**The Manager,**
'Morning Star', Vaddukoddai.

*JDCSI*

## Youth Camp at Karainagar

"*The Witness of the Church*" was the theme of the Annual Youth Camp of the Jaffna Diocese of the CSI held at Casuarina Beach from the 21st to the 25th of April, 1981.

Rev. S. N. Suguunanthan, was the Programme Co-ordinator and Rev. J. J. Ratnarajah, the Chaplain. Addresses at the sessions were given by the following on subjects related to the main theme :—

Mr. J. S. David
— "Sensitivity to other's needs"
Rev. J. J. Ratnarajah
— Preaching the Gospel
Mr. Nesan Kadirgamar
—The Call to obedience and service
The Rev. D. J. Ambalavanar
— The Ministry of the Church
Mr. Silan Kathirgamar
— The Church's Mission outside the Church walls

Four Bible Studies were conducted by Rev. A. Jeyakumaran on the theme.

There were group meetings and group presentations each day.

Swimming lessons by Dr. Robert Porter of Jaffna College was a new feature at the camp.

35 boys and 19 girls participated at the camp. Rev. T. S. Premarajah, Presbyter of the Karainagar Church was in charge of all arrangements ably assisted by Mr. S. Ratnavel. Mrs. N. Kadirgamar officiated as Matron at the camp.

"There were in all eight sessionss", the last of which was a Panel Discussion.

The participants visited the JDCSI Farm at Varany on 22-4-81 when a new building was declared open by the G. A. Jaffna.

The Camp concluded on 25-4-81 at 3 p. m. with a closing Service.

*Kankesanthurai Church (JDCSI)*

## Inaugural Meeting the Youth League

The inaugural meeting of the K. K. S. Church Youth League was held on Sunday the 3rd of May in the School Hall.

Mr. Prince Ratnam, the Worker in charge of the Church Presided. Mr. P. J. Suriyakumar of the Christa Seva Ashram, Chunnakam addressed the Youth. He gave some suggestions on how the Youth could help in building up the Church.

This was followed by the election of Office Bearers. The following were elected office bearers:

President — Mr. Suriyakumar Daniel; Secretary: Miss. Kamala Thamboe; Treasurer: Mr. Wesley Gnanasekaram. A Committee of eight members was also elected. The meeting terminated with a Prayer by Mr. Suriyakumar.

## Evangelistic Sunday 24-5-1981

| | *Churches* | *Preachers* |
|---|---|---|
| 1. | Colombo | Mr. S. D. Thiagarajah |
| 2. | Kilinochchi | Rev. S. Jeyanesan |
| 3. | Usan | Mr. G. Y. Navaratnam |
| 4. | Chavakachcheri | Mr. W N. Thevakadacham |
| 5. | Nunavil | Mr. P. Naveendranugoolan |
| 6. | Varany - Kudathani | Rev. J. M. Rajakulendran |
| 7. | Uduppiddy | Mr. S. D. Ponniah |
| 8. | Atchuvely | Mr. A. T. Thambiappah |
| 9. | Erlalai North | Mr. N. Subramaniyam |
| 10. | Erlalai South | Mr. Christie Robert |
| 11. | Tellipallai | Mr. N. Sathiyamoorthy |
| 12. | Kankesanthurai | Mr. V. Rajkumar |
| 13. | Uduvil | Mr. A. K. Sinnathamby |
| 14. | Manipay | Mr. G. Rajanayagam |
| 15. | Navaly | Mr. P. E. Thanarajasingam |
| 16. | Annaikoddai | Mr. E. P. Solomons |
| 17. | Pandatherippu | Mr. J. C. Mather |
| 18. | Alaveddi - Sundilipay | Mr. K. Chelliah |
| 19. | Moolai | Mr. Prince Ratnam |
| 20. | Chankanai | Mr. S. J. Manicam |
| 21. | Vaddukoddai | Mr. S. Jebanesan |
| 22. | Araly | Mr. S. Pancharatnam |
| 23. | Karainagar | Mrs. A. N. L. Viraspillai |
| 24. | Pungudutivu - Velanai | Mr. K. Thevanesan |
| 25. | Delft | Rev. S. C. Arnold |

## Too much is expected of Pastors' wives

*The National Federation of Kyodan Women's Societies* has brought out a book in which a number of wives of Pastors have focussed on the experiences of Pastors' wives in Japan.

"A pastor's wife" says the book "is expected to be sweet and humble, to have a firm faith, to play the organ, and dress simply (no cosmetics or jewellery) yet not look shabby: she must treat everyone cordially and never display a temper."

The book concludes with a discussion on the role of the pastor's wife. Some regard her role as a sacred calling similar to the Pastor's.

Others reject this view insisting that the Pastor's wife is a lay Christian like any other and her responsibility is simply to serve the Church like any other Church member, no more, no less.

There is much more in this book about the attitudes and real life situations of pastors' wives. When, we wonder, would we have a book written by pastors' husbands?

[*NCC Review Feb. 1981*]

## The Kurunegala Train Crash

The train driver of the Jaffna Night mail who took over from Anuradhapura, Mr. Peter Delpachitra will be charged before the High Court of Kurunegala for causing the death of 12 passangers and injury for over a hundred, in the worst rail tragedy in recent times.

The tragedy occurred early in January this year when the Jaffna mail train ploughed into the Batticaloa train at the Kurunegalla Station.

A Rs. 4 lakh award has been recommended by the Compensation Committee to be paid to the victims.

## CCA — Pre Assembly Events

Three major meetings will precede the CCA Assembly at Bangalore (May 18 to 28) — *The Youth Forum, the Women's Forum* and *the Asian Ecumenical Course* (AEC).

*Youth Forum* (May 11—16). This will bring together youth delegates (27 years or younger) and those who register as stewards. There will be 30 stewards, 15 from India.

*Women's Forum* (May 14—17) The aim of this Forum will be to discover ways by which women's contribution would be felt in the assembly.

*The Asian Ecumenical Course* (May 5—29) will include visits to various centres in India to gain on understanding of Indian realities which would constitute the context of the Indian Church's witness.

This course will be generally for assistant or associate general Secretaries of the CCA member Churches and those who hold offices.

*Putney Church, London*

### Mather — Rajanayagam

The marriage of Jayantha Mather, Engineer, Christiania Nielson London, son of the Late Mr. Victor Mather & Mrs. Victor Mather of "Bonnigton" Manipay to Mohana Rajanayagam, daughter of Mr. A. R. Rajanayagam and Mrs. Rajanayagam of No. 655, K. K. S. Road, Jaffna took place at Putney Methodist Church, London on the 20th April, 1981 at 3-30 p. m.

## The General Manager of the Bank of Ceylon for 16 Years

The death of *Mr. Chelliah Loganathan,* formerly General Manager of the Bank of Ceylon removes from the scene one of the great sons of the soil.

He was the first Sri Lankan General Manager of the Bank of Ceylon, and later occupied such responsible positions as General Manager of the Development Finance Corporation of Sri Lanka, Consultant to the United Nations Asian Institute for Economic Development and Planning in Bangkok, and Advisor to the World Bank in Washington. He was also member of Planning Commission in the first Bandaranayake Government (1956—1959).

His greatest contribution to developed and developing countries is "The Loganathan Plan" — a well known classic which remains a Reference to heads of Governments and financial experts. He was a pioneer in championing the human aspect in economic planning that workers must have a share in the companies where they toil, if democracy is to be meaningful in the life of a nation.

In the sphere of diversification of banking business, he was largely responsible for one of the earliest Hotel Projects in Sri Lanka — The Hotel Taprobane.

Mr. Loganathan was a student at Jaffna College where he studied for a brief period in the Intermediate in Arts class in the early thirties. His brother the late Mr. Tharmakulasingham, Attorney-at-law was also a student at Jaffna College.

Mr. Loganathan continued his loyalty to his old school and to the Mission. He was the Chief Guest at the Union College Prize Giving in 1958 on the invitation of Mr. I. P. Thurairatnam, who was then Principal of the School.

His funeral took place on 7-5-81 at his ancestral home at Vethariniya Valavu in Uduvil East, and his body was cremated at the Uduvil Crematorium at Maruthanamadam.

*IN BRIEF*

- Currently in session is an *In-Service programme* for Teachers in Christianity in State and Private Schools. The venue is St. Thomas' Collegiate School at Bandarawela. The Seminar is being conducted trilingually. Free train travel, food and accommodation is being provided.
- *The Insurance Corporation of Sri Lanka* has decided on making a Rs. 60 million investment in Property Development Limited (PDL), the Bank of Ceylon's high rise building project on Echelon Squre in Colombo Fort.

# உதயதாரகை

# UTHAYATHARAKAI

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 141] 8 — 5 — 1981 [இதழ் 19

## கொண்டாட்டமும் கடமையும்

நமது சிந்தனைகளைத் தட்டி எழுப்பி ஊக்கமான செயற்பாட்டிற்கு நம்மை ஏவி விடும் மூன்று கொண்டாட்டங்கள் இம் மாதத்தில் நம்மை எதிர்நோக்கி வருகின்றன — நற்செய்திப் பணி வாரம், ஆண்டவர் பரமெழுந்த திருநாள், ஆசியா ஞாயிறு. இவைகளைக் கொண்டாட்டங்கள் என்கிறோம் — ஏனெனில் கொண்டாட்டங்களிற் கருத்துண்டு; அக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு நம் வாழ்க்கை முறைகளை மாற்றி அமைப்பதோ, ஏற்றவாறு சில காரியங்களை நிறைவேற்றுவதோ நம்மைச் சார்ந்த கடமையாய்க் கொள்ளப்படும்.

நமது ஆண்டவர் தாம் பரமெழுந்து போவதற்குச் சற்றுமுன் தம் சீடருக்குக் கட்டளை கொடுத்துத் தாம் போனபின் அருளப்படும் தேற்றரவாளனின் பெலனைக் கொண்டு எருசலேமிலும் யூதேயாவிலும் சமாரியாவிலும் உலகத்தின் எல்லா எல்லைகள் வரையும் தம்மைப் பற்றிய செய்தியைக் கூறியறிவிக்கப் பணித்தார். அப் பணிப்பைச் சிந்தையிற் கொண்டே திருச்சபை செயலாற்றி வந்தது, வருகிறது. ஆதித் திருச்சபையில் இதைச் "சீடருக்கு மாத்திரமே" கொடுக்கப்பட்ட கட்டளையாய்க் கணிக்காமல், எங்கெங்கே விசுவாசிகள் பரம்பினார்களோ அங்கெல்லாம் இச் சுவிசேட விதையை விதைத்தார்கள்; அது வளர்ந்து பரம்ப ஆரம்பித்தது. அதனாற்றான் இங்குள்ள நாமும் இச் செய்தியைக் கேட்டு நம் மீட்பின் நிச்சயத்தைப் பெறுவதற் கருகரானோம். பிறரும் இதைக் கேட்டுத் தம் ஈடேற்ற பாதையைக் காணச் செய்வது நமக்குமிடப்படும் ஆஞ்ஞையெனக் கொள்கிறோம். இங்குள்ள நம்மை ஆண்டவர் பார்த்து, நமக்குரிய சூழ்நிலையில் கட்டளை கொடுப்பாரானால், அது: **யாழ்ப்பாணத்திலும், இலங்கையிலும், ஆசியாவிலும், உலகத்தின் கடைசிப் பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருங்கள்** என்றவாறிருக்குமெனச் சிந்திக்கிறோம். இக்கட்டளையைச் சிரமேற் கொண்டு செயலாற்ற நாம் ஆயத்தமாக வேண்டும்.

இந்தளவும் நம்மை நாமே பராமரித்து வந்து விட்டோம். நற்செய்திப் பணியென ஆண்டொருமுறை கூடி அளவளாவிப் பேசி வந்தோம். இனியோ, கிரியை செய்யும் காலம். ஒருவாறு வெளிக்கிளம்பிக் கூடாநாட்டை விட்டு அதற்கப்பாற் சென்று விட்டோம். செல்வதற்கு இன்னும் ஏராளம் இடமுண்டு; தருணமுண்டு. செல்வதற்குத் துணிவு கொள்ளுவோம். ஆண்டவர் முன் சென்று அங்கே நம்மைப் பார்த்து நிற்கிறார்.

ஆசியா ஞாயிறெனச் சுமார் ஐந்தாண்டுக் காலமாய் கொண்டாடி வருகிறோம். இக்கண்டத்தின் குறைவுகளும் தேவைகளும் நிவிர்த்தி பெறத் திருச்சபையின் செயற்பாட்டைப் பார்த்த வண்ணம் இருக்கின்றன. ஏனெனில் ஒடுக்கத்திலும் வறுமையிலும், அறிவீனத்திலும் சுகவீனத்திலும் பிடிபட்டுத் தவிக்கும் மனித குலம், அப்பேர்ப்பட்டவர்க்கே சேவை செய்து மீட்பளித்த ஆண்டவரின் பெயராலல்லாது பூரண மீட்பைக் காண்பதரிது. வாய்ப் பேச்சளவான மீட்பையல்ல, வாழ்க்கையின் அம்சங்கள் அனைத்தையும் உள்ளடக்கும் மீட்பையே ஆசியா தேடித் தவிக்கிறது. அதற்கதை இட்டுச் செல்வது திருச்சபையின் கடனாகும். ஆசியாவின் ஓர் பாகமான நாம் அதற்காகவும் நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

நாமெல்லாரும் "மிஷனரிமார்" அல்ல; எனினும் யாவருமே "அப்போஸ்தலர்" — அனுப்பப்படுகின்றவர்கள். ஆகவே என்னத்திற்காய் அழைக்கப்பட்டோம்; என்னத்திற்காய் அனுப்பப்படுகிறோம் என நினைவிற்கொண்டு, தூரதேசம் போய்ச் சுவிசேடம் அறிவிக்கும் வாய்ப்பைப் பெறாத நாம்கூட நமது நாட்டிலும், கிராமத்திலும், நமது அயலகத்திலேயும் அவர் பணி செய்வது நங்கடன். தூரதேசம் போய்ப் பணி செய்வாரும் உளர். அவரையும், நம் சார்பில் இப் பணியைப் பலவிடங்களிலும் செய்யும் நம் உடன் ஊழியர் அனைவரையும் நமது ஆதரவுக்குள்ளாக்க வேண்டும். வேலைகள் செவ்வையாய் நிறைவேற நம் பொருளாதாரச் சகாயமும் அவர்க்கு வேண்டும். இவற்றைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறோமா? அவர் பணி நம் கடன் ஆயிற்றே!

அதுபோலவே ஆண்டவருடைய செய்தியைத் தேவைப்பட்டு நிற்கும் ஆசியா முழுவதுக்கும் அவர் அருள் கிட்டும்படி ஆசிய திருச்சபை ஊக்கமாய் உழைப்பதாக.

## உயிர்ப்பிக்கப்பட்ட வாலிபன்

— V. ராஜ்குமார் —

நமது ஆண்டவராகிய கிறிஸ்து பெருமான் ஒருநாள் நாயீன் ஊர்ப் பக்கமாகப் போய்க்கொண்டிருந்தார். இது கப்பர்நகூமுக்குத் தென்மேற்கேயுள்ள ஒரு சிற்றூர். ஊர் வாயிலுக்குச் சமீபமாய் அவர் வந்த போது மரித்துப் போன ஒரு வாலிபனை, அவன் சடலத்தை ஒரு நீண்ட பலகையின் மேற் இடத்தி, தூக்கிக் கொண்டு வந்தனர். இது அந்த நாட்டின் வழக்கம். பாடையின் முன்பாக அந்த வாலிபனின் விதவைத் தாய் அழுத வண்ணம் சென்று கொண்டிருந்தாள். அவளோடு இன்னும் சில பெண்கள் அழுது கொண்டே சென்றனர். குழல் ஊதி ஓலம் தெரிவிப்போரும் கூலிக்கு மார் படிக்கும் கூட்டத்தினரும் கூடவே சென்று கொண்டிருந்தனர். இந்தப் பரிதாபக் காட்சியைக் கிறிஸ்து பெருமானின் கண்கள் கண்டன; அவர்தம் கருணை உள்ளம் உருகிற்று. தாயைப் பார்த்து, "அழாதே, அம்மா" என்றபடி பாடையைத் தொட்டனர். "வாலிபனே, எழுந்திரு" என்ற அதிகாரச் சொற்கள் அவர் வாயிலிருந்து வந்தன. அவன் எழுந்தான்; உட்கார்ந்தான். பிரமிப்பு அனைவரையும் பற்றிக் கொண்டது. இந்த வாலிபனைக் குறித்த மூன்று குறிப்புக்களை வாலிப சகோதர சகோதரிகள் முன்வைக்க விரும்புகிறேன்.

**அவன் அழகாகச் சோடிக்கப்பட்டிருந்தான்.**

அந்த வாலிபனை அழகிய புத்தாடை கொண்டு உடுத்தியிருந்தார்கள். அவன் அழகான பூக்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தான். பார்ப்பதற்கு அழகாயிருந்தான். பூக்களிலிருந்தும் அவனுக்குப் பூசப்பட்ட பரிமள தைலத்திலிருந்தும் வெள்ளைப் போளத்திலிருந்தும் நறுமணம் கமகமவென்று வீசிக்கொண்டிருந்தது. இவ்விதமாக அவன் காணப்பட்ட போதிலும், கிறிஸ்து பெருமானின் சாயலும் அழகும் — அதாவது உயிருள்ள ஓர் அழகு — அவனிற் காணப்படவில்லை; கிறிஸ்த வாழ்க்கையின் வாசனையும் வீசவில்லை.

அழகு நல்லதுதான், ஆகவே கடவுள் உலகனைத்தையும் அழகாகச் சிருட்டித்து, ஈற்றிலே மனிதனையும் தம் சாயலாகப் படைத்து, எல்லாவற்றையும் நல்லதெனக் கண்டார் எனத் திருமறையூடாய்ப் பார்க்கிறோம். ஆனால் அழகின் நிமித்தமாக மனிதன் பாவநிலைக்குத் தள்ளப்பட்டு அழிந்து போனதையும் திருமறை வாயிலாக அறிகிறோம். தாவீது ராஜாவே அழகிலே ஆசை கொண்டதினால் ஒரு பெருங் கொலை பாதகத்துக்குட்பட்டதைக் காண்கிறோம். ஆதலாற்றான் சாலமோன் ராஜா அழகு வீண் என எழுதினார் போலும்! (நீதி. 31:30). இன்றைய உலகின் வாலிபர் அழகிலே ஆசை கொண்டவர்களாய், அந்த ஆசைக்காய்த் தம் காலத்தையும் நேரத்தையும் வீண் செலவு செய்கின்றவர்களாய்க் காணப்படுகின்றனர். மாறுகின்ற காலத்திற்கேற்ப, மாறுகின்ற நாகரீகத்திற்கேற்பத் தங்களை அழகுபடுத்தக் கருதித் தாங்களே மாறிய கோலமாய்க் காட்சியளிக்கின்றனர். இறைவன் கொடுத்த இயற்கை அழகைவிடத் தம்மைத் தாமே அழகுபடுத்த முனைவோர் பலர். இவ்விதமான அழகினாற் பயனில்லையெனவே கொள்ள வேண்டும். இப்பேர்ப்பட்ட யாவரும் அலங்கரிக்கப்பட்ட அந்த வாலிபனைப் போலவே பொய்யலங்காரம் பெற்றவர்கள். கிறிஸ்துபெருமானின் அழகும் சாயலும் காணப்படுவதே மேன்மை. அதுவே உண்மை அழகு. கிறிஸ்த வாழ்க்கையின் நறுமணமே அவர்களிடத்தில் வீச வேண்டும். அந்த வாலிபன் — உயிரற்ற நிலையில் — அழகாகச் சோடிக்கப்பட்டிருந்தான்.

**அவன் உணர்ச்சியற்றவனாக இருந்தான்**

அந்த வாலிபன் தன்னைக் குறித்தோ தன் நிலையைக் குறித்தோ எவ்வித உணர்ச்சியும் அற்றவனாகக் காணப்பட்டான், அவன் சடலத்திற்கு என்னதான் செய்தாலும், அதை வெட்டினால் என்ன, குத்தினால் என்ன, சுட்டெரித்தாற்றானென்ன. அது அவனுக்குத் தெரிந்திருக்க மாட்டாது. தனக்காகத் தன் தாயும் தன் சனமும், தன் சமுதாயமும் தன் தோழரும் அழுகின்றனரே என்ற உணர்ச்சி இல்லை. தான் போய்க் கொண்டிருந்த பாதையின் ஓரத்திலே எத்தனையோ மக்கள் ஊனமுற்றுத் தத்தளித்து இடக்கின்றனரே என்றாவது, எத்தனையோ மக்கள், ஏழை எளியவர்களாய், ஒருவேளை உணவிற்காய்த் தவிக்கின்றனரே என்றாவது உணரும் சக்தியற்றவனாயிருந்தான். ஒருவகையிற் சொல்லப்போனால் இன்றைய வாலிப சமுதாயமும் இப்பேர்ப்பட்ட உணர்ச்சியற்ற நிலையிலேயே இருப்பதாய் நாம் காணலாம்.

தமது நிலையைக் குறித்தோ, எதிர்கால வாழ்க்கையின் தன்மையைக் குறித்தோ, உணர்வு சற்றுமின்றிக் கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என வாழத் துடிக்கும் வாலிப உள்ளங்கள் இன்று எத்தனை! தமக்காகவும் தம் நல்வாழ்விற்காகவும் தம் குடும்பமும் சமுதாயமும், திருச்சபை அனைத்துமே கண்ணீர் வடிக்கின்றனவே எனக் கண்டுணராத வாலிப மனங்கள் எத்தனை! தமது குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் திருச்சபைக்கும், அவைக் கூடாய் உலகிற்கும் பணியாற்றும் பொறுப்பு தம்மைச் சார்ந்ததேயெனச் சிந்தியாத வாலிபச் சமுதாயம் எத்தளவு! நாளைய உலகும் சபையும் தமது கையிலேயேயெனக் காணாத வாலிபர் எண்ணிக்கை எத்தனை! இறந்து போன அந்த வாலிபன் இவ்வுலக உணர்ச்சி யற்றவனானன்.

## சத்தியபுரத்தில் வாழ்வுத் திருவிழா

கர்த்தர் உயிர்த்தெழுந்த திருநாள் மாலை உடுவில் வட்டாரத்தில் உள்ள சத்தியபுரம் நற்செய்திப்பணியகச் சிற்றாலயத்தில் வாழ்வுத் திருவிழா நடாத்தப்பட்டது. இவ்விழா திரு. J. மனோகரன் அவர்களின் ஜெபத்துடன் ஆரம்பமானது. உடுவில், இணுவில் திருச்சபைகளைச் சேர்ந்த வாலிபர்கள் விழாவிற் கலந்து சிறப்புப் பாடல்கள் பாடினர்; சத்தியபுரம் ஓய்வுநாள் பாடசாலை மாணவர்களாலும் சிறப்புப் பாடல் வழங்கப்பட்டது. திறந்த கல்லறை பகரும் சான்று என்ற பொருளில் உயிர்த்தெழுந்த திருநாளுக்குரிய செய்தி திரு. V. இராஜ்குமார் அவர்களால் கொடுக்கப்பட்டது. விழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக "அருள் விருந்து" என்னும் வில்லிசை, அருள்திரு. D. C. இரத்தினசிங்கம் போதகராலும் அவர் குழுவினராலும் நடாத்தப்பட்டது. விழாவின் போது சத்தியபுரத்தைச் சேர்ந்த திரு. திருமதி. T. சிவஞானம் அவர்களால் விழாவிற் கலந்து கொண்ட யாவருக்கும் தேனீர் உபசாரணை அளிக்கப்பட்டது. விழா சிறப்புற அமைய பலவழிகளிலும் உதவிய யாவருக்கும் திரு P. N. ஜெயசீலன் அவர்கள் நன்றி கூறினார். அருள்திரு. D. C. இரத்தினசிங்கம் போதகரின் இறை ஆசி வழங்கலுடன் விழா இனிதே முடிவுற்றது. உடுவில் திருச்சபையிலிருந்து சில அங்கத்தினரும் விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

அன்று காலை சத்தியபுரம் நற்செய்திப் பணியகச் சிற்றாலயப் பிரிவைச் சேர்ந்த பதினொரு பிள்ளைகளுக்கு உடுவில் தேவாலயத்தில் சபைக்குரு அருள்திரு N. W. G. சுகுணராஜா போதகரால் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. இதன் பிரதிபலிப்பாக அமைந்ததே இவ்வாழ்வுத் திருவிழா. சத்தியபுரத்தில் நடைபெற்று வரும் பணிகள் யாவும் குறிப்பிடத்தக்கவை. அங்கு பணிபுரிந்து வரும் மூவரையும், அவர்கள் பணிகள் யாவற்றையும் இறைவன் தன் திருக்கரம் கொடுத்துத் தாங்கி வழி நடத்தி தன் திருப்பெயரை மகிமைப் படுத்துவாராக.

— நிருபர்.

## இந்தியாவில் கொள்ளைக்காரர் அட்டகாசம்

இந்தியாவின் வடபகுதியிலுள்ள உத்தரப் பிரதேசத்தின் ஏதா மாவட்டத்தில் 24 பேர் கொள்ளையர் கூட்டங்களினால் கொல்லப்பட்டதையிட்டு இந்திய அரசாங்கம் மேலதிகமான காவற் படையினரை அங்கே அனுப்பியுள்ளது. சென்ற வாரத்தில் நடந்த நாலு தனிப்பட்ட சம்பவங்களில் உயிரிழந்த இவர்களில் அதிகமானவர்கள் ஹரிசன மக்களாவர்.

குன்வார்ப்பூர் கிராமத்தில் சென்ற ஞாயிற்றுக்கிழமையன்று உயர் குலத்தவர் ஒருவரை அவமதித்தனர் என்ற சாட்டில் 11 ஹரிசன மக்கள் அவரிடம் மன்னிப்புக் கோரும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர். மன்னிப்புக் கோரியதும் அனைவரும் சுட்டுவீழ்த்தப்பட்டனர் என்று செய்திகள் கூறுகின்றன.

பிகார் மாகாணத்தில் சென்ற முதலாம் திகதியிலிருந்து இனக் கலவரங்கள் உண்டாகின. ஒரு மதுபானக் கடையில் இரு சாராருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்து ஏற்பட்ட இக்கலவரங்களில் சுமார் நாற்பத்தெட்டுப் பேர் உயிரிழந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கலவரங்களைக் கட்டுப்படுத்துவதற்காக இராணுவப் படையினர் அங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## உண்ணாவிரதத்தின் விபரீத முடிவு

அயர்லாந்துக் குடியரசில் ஒளிவுப் போர் முறையிற் பங்கெடுத்துக் கைதியாக்கப்பட்டிருந்த பொபி சான்ட்ஸ், சட்டவிரோதமாகப் போராயுதங்கள் வைத்திருந்த குற்றச்சாட்டில் நாற்பத்தொரு வருடச் சிறைத் தண்டனை பெற்று வெல்பாஸ்ற் நகருக்கருகாமையில் உள்ள ஒரு சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தவர். தம்மையும் தமது சகாக்களான புரட்சிக்காரரையும் அரசியற் கைதிகள் எனக் கணிக்க வேண்டுமென்ற கோரிக்கையில் உண்ணாவிரதத்தை மேற்கொண்டு, விரதத்தின் 66 ஆம் நாளான செவ்வாய்க்கிழமை 5 ஆம் திகதியன்று காலை 1-17 மணிக்குக் காலமானார். இவர் மரணத்தைத் தொடர்ந்து வட அயர்லாந்தின் பல பாகங்களிலும் திட்டமிடப்பட்ட பலதர வன்செயல்கள் இடம்பெற்றன. எனினும் இப்பேர்ப்பட்ட அசம்பாவித செயல்கள் இடம்பெறக் கூடுமென ஏற்கெனவே அறிந்திருந்த பிரித்தானிய அரசு துருப்புக்களையும் காவற் படையினரையும், பல இடங்களிலும் ஆயத்தமாக வைத்திருந்த காரணத்தால் நிலை ஒருவாறு சமாளிக்கப்பட்டது.

27 வயதான சான்ட்ஸ் மரணமடைந்த சில நிமிடங்களுக்குள்ளாகவே வெல்பாஸ்ற் நகரிலும் சுற்றுப்புறங்களிலும் வன்செயல்கள் ஆரம்பமாயின. மூவர் படுகாயமடைந்தனர். குறைந்த பட்சம் எட்டுப் பெரும் கட்டடங்கள் தீக்கிரையாக்கப்பட்டன, துருப்புக்கள் குண்டு வீசித் தாக்கப்பட்டன. ரோமன் கத்தோலிக்க மக்கள் பெரும்பான்மையாயிருந்த பிற இடங்களில் தனி நபர்களின் வாகனங்களும் புரட்டிவிடுத் தீயிடப்பட்டன.

உண்ணாவிரதம் இருக்கும் காலத்திலேயே, சென்ற மாத ஆரம்பத்தில், பிரித்தானியப் பாராளுமன்றத்தின் வட அயர்லாந்துத் தொகுதியொன்றின் உபதேர்தலில் தெரிவு செய்யப்பட்டிருந்த சான்ட்ஸ், இறுதிக் காலங்களில் உலகின் பல பிரமுகர்களும் உண்ணாவிரதத்தைக் கைவிடும்படி விடுத்த வேண்டுகோட்களை ஏற்க மறுத்து விடாப்பிடியாய் விரதத்தைத் தொடர்ந்து நடத்தினர். இவரின் கோரிக்கையை ஏற்க மறுத்த பிரித்தானிய அரசாங்கம் இவரும் இவருடைய உடன் கைதிகளும் சட்டவிரோதமான முறையில் நடந்து கொண்ட குற்றவாளிகளே யல்லாமல் அரசியற் கைதிகளுமல்ல, போர்க் கைதிகளுமல்ல என்று வற்புறுத்திக் கொண்டது. சான்ட்ஸின் உடன் கைதிகளான இன்னும் மூவர் உண்ணாவிரதத்தை மேற்கொண்டுள்ளனர்.

## புதிய சீனாவில் புத்துயிர் பெறும் திருச்சபை

(முற்றொடர்)

இக் கட்டடங்களில் இருந்து வழிபாட்டிற் சேர்ந்து கொள்பவர்க்கு உதவியாக ஒலிபெருக்கிகள் அமைக்கப்பட்டிருந்தன. இந்தச் சபை முன்னர் பிரிஸ்பித்திரியன் (மூப்பர் ஆளுகை) பாரம்பரியமான சபை; எனவே பிரிஸ்பித்திரியன் முறையில் வழிபாடு நடத்தப்பட்டது.

இப் பெருங்கூட்டத்திலே, மின்காந்தம் செறிந்துள்ள பான்மையில் ஆவியானவரின் சமுகம் பிரதிபலித்துக் கொண்டிருந்ததை உணரக் கூடியதாயிருந்தது எனக் கனம் கார்சன் அவர்கள் விவரிக்கிறார்கள். மிக வெப்பமான வேளை; அதையும் பாராட்டாது கூடியிருந்த சனமனைத்தும் ஆவியோடும் உற்சாகத்தோடும் ஞானக் கீதங்களைப் பாடிக் கர்த்தரைத் துதித்தனர். குருமாரில் ஒருவர் வேதப்பாகம் வாசிக்க ஆரம்பித்ததும் முழுவேதங்கள், புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள், பகுதிப் பிரதிகள், கையெழுத்துப் பிரதிகள் பலவர்ணமான உறைகளுடன் ஏராளமானவர்களின் கைகளில் இருக்கிறதையும், இல்லாதோருடன் பிறர் பகிர்ந்து, வாசிப்பதைக் கவனமாய்ப் பார்த்துக் கொண்டிருந்ததையும் அவதானிக்கக்கூடியதாயிருந்தது. வளர்ந்தவர்கள் 11 பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களின் கண்களில் கண்ணீர் ததும்பியது. அதைக் கண்ட அநேகர் தாமும் கண்ணீர் விட்டனர். வயது சென்று கண் தெரியாது போன ஒரு குருவை ஆசீர்வாதம் கூறுவதற்காகக் கைலாகு கொடுத்துப் பிரசங்கப் பீடத்திற்குக் கொண்டு சென்றார்கள். அந்த நேரம் ஒரு குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்டிருக்கும் எனக் கனம் கார்சன் அவர்கள் விவரிக்கிறார்கள்.

இந்த ஆராதனையிற் செய்யப்பட்ட பிரசங்கம் மிகவும் நேரடியான சுவிசேஷப் பிரசங்கம்; ரோமர் 6 : 3 - 11, 10 : 8, கலாத்தியர் 3 : 15 முதலிய வசனங்களை ஆதாரமாகக் கொண்டது:-

"நீங்கள் இப்பொழுது ஞானஸ்நானம் பெற்றது மிகவும் காத்திரமான செயல். ஆண்டவர் தாமே ஞானஸ்நானம் பெற்று உங்களுக்கு முன்மாதிரியை வைத்துப் போனார். சிலுவையிற் சிந்தப்பட்ட இரத்தத்தினால் நீங்கள் மீட்கப்படுகிறீர்கள். நீங்கள் சீவனுடையவர்களாகும் பொருட்டு உங்களுக்காக மரித்த ஆண்டவர், உயிரோடெழுந்து ஆவியானவரை அருளிச் செய்தார். ஆவியானவரே உள்ளாக இருந்து உங்களைச் சுத்திகரிக்கிறார். இந்தத் தண்ணீர் அந்தச் சுத்திகரிப்பின் அடையாளமாயிருக்கிறது. அப்படியானால் உங்கள் வாழ்க்கையில் ஒரு மாற்றம் உண்டாக வேண்டும். உண்டாகிறதா? பழைய தன்மையின் மேல் ஒரு புதிய துண்டைப் பொருத்துவது போன்றதாய் இருக்காதீர்கள். கடவுள் இராச்சியத்தின் புதிய இரசத்தை வைப்பதற்கு முழுவதும் புதிதான இரசத் துருத்திகளே உங்களுக்குத் தேவை. யோவான் 3 ; 16 ஆம் வசனத்தைப் பாருங்கள். அதுவே சுவிசேஷத்தின் சாராம்சம், நம்புகிறீர்களா? மனம் மாறி விட்டீர்களா? சொல்லப்போனால், நீங்கள் உண்மையான கிறிஸ்தவர்களாய் வந்துவிட்டீர்களா? இது நம் ஒவ்வொருவருக்கும் உரிய கேள்வி."

திரு இருதயத் தேவாலயத்திலிருந்து காலை 10-00 மணி வழிபாட்டிற்காக ஷாங்ஹாய் நகரின் மத்தியிலேயுள்ள மோஆன் ரொங் ஆலயத்திற்குச் சென்றார்கள். இது முன்னர் Moore Memorial Methodist Church என அழைக்கப்பட்டது ஆலயத்துக்குள்ளும் பக்கமாயிருந்த கட்டடங்களிலும் சுமார் 1700 பேர் வழிபாட்டிற் சேர்ந்திருந்தனர். வயது சென்ற ஒரு மாது மிகுந்த அனலோடு பியானோ வாத்தியத்தை மீட்க 1700 குரல்கள் "நில்லும், இயேசுக்காய் நில்லும்" எனக் கருத்தறிந்து பாடுவதா போற் பாடிக் கொண்டிருந்தனர். ஆம், பல வருடங்களாக (கலாச்சாரப் புரட்சியின் காலத்தில்) இவர்கள் தான், மரணம் எதிர்நோக்கி நின்ற போதிலும் கூட, இயேசுவுக்காய்த் தைரியமாய் எழுந்து நின்றவர்கள்.

(தொடரும்)

## பால் வேறுபாடற்ற வேதாகம மொழிபெயர்ப்பு

வட அமெரிக்காவின் சுதேச சபைச் சங்கம் ஒரு புதிய திட்டத்திற்கு அனுமதி கொடுத்துள்ளது. இதன்படி சபைகளில் அநேகமாக உபயோகிக்கப்படும் வேதாகமப் பகுதிகளில் பிரத்தியேகமாக ஆண்களைக் குறிக்கும் சந்தர்ப்பங்களை விட, ஆண் பெண் இருபாலாரையும் குறித்து எழுதப்பட்டிருக்கும் இடங்களில் அதற்கேற்ற புதிய (பொதுவான) பதங்களை உபயோகித்து மூல உரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது. அடிப்படை மொழிபெயர்ப்பு R. S. V. என்ற அமெரிக்க மொழிபெயர்ப்பாயிருக்கும். இதில் பொதுவாக மனித குலத்தை — அதாவது ஆண், பெண் என்ற இருபாலாரையும் — குறித்த இடத்தில் அதற்கேற்ற புதிய பதங்கள் போடப்படும். இதன் மூலம் கடவுளின் முழுமையான தன்மையைச் சபைகள் விளங்கிக் கொள்ள ஏதுவாகும் என நியாயம் கூறப்படுகிறது.

இந்த மொழிபெயர்ப்புப் பரீட்சார்த்தமான ஒன்றாயிருக்கும் எனவும், இது எல்லாச் சபைகளினாலும் ஏற்றுக் கொள்ளப்படுவதைப் பொறுத்தே முழு வேதாகமமும் இவ்வாறு மொழிபெயர்க்கப்படுவதைப் பற்றிய தீர்மானம் எடுக்கப்படலாமெனவும் "திருச்சபைத் தூது" சஞ்சிகையின் செய்தி ஒன்று கூறுகின்றது.

## சீனாயில் ஆலயத் தொகுதி

கடவுள் மோசேக்குப் பத்து தியாயப் பிரமாணங்களைக் கொடுத்த சீனாய் மலையின் அடிவாரத்தில் மூன்று ஆலயங்கள் கட்டப்படவுள்ளன. இப்பகுதி தற்காலத்தில் பல அரசியற் பிரச்சனைகளுக்கும் ஆளான பிரதேசம் என வாசகர் அறிவர்.

எகிப்தின் ஜனாதிபதி சடாற் அவர்கள் போட்டிருக்கும் ஒரு திட்டத்தின்படி 600 லட்சம் டொலர் (சுமார் 10,800 லட்சம் ரூபா) செலவில் ஒரு கிறிஸ்த ஆலயம், ஒரு யூத ஆலயம், ஓர் இஸ்லாமிய ஆலயம் ஆகியன இங்கே நிறுவப்படும். இதற்கான பேச்சு வார்த்தைகளை ஜனாதிபதி சடாற் பல நாடுகளிலுமுள்ள பல நிதியுதவித் தாபனங்களோடும் நடத்தியிருந்தனர். அமெரிக்காவில் கலிபோர்னியாவில் நிறுவப்பட்டுள்ள ஒரு சபைச் சங்கம் இதற்காகப் பத்து லட்சம் டொலர் வாக்குப் பண்ணி ஒரு லட்சத்தை ஏற்கெனவே அனுப்பியுள்ளதெனச் செய்திகள் கூறுகின்றன. ஜனாதிபதி சடாற் இந்த ஆலயத் தொகுதிக்கான கல் நாட்டு வைபவத்தை தாம் 1981 நவம்பர் மாதத்தில் நடத்தக் காத்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## விவாகம்

இங்கிலாந்தில் பொறியியலாளராகப் பணி புரியும் திரு. சுவர்ணரத்தினம் ரூபன் ஸ்பென்சர் அவர்களுக்கும் மானிப்பாய்த் திருச்சபையைச் சேர்ந்தவரும் முன்னே உவாக்கர்ஸ் ஸ்தாபனத்தைச் சேர்ந்திருந்தவருமான செல்வி சாந்தகுமாரி மேதர் அவர்களுக்குமான பரிசுத்த மெய் விவாகம் இம்மாதம் 5 ஆம் திகதியன்று மானிப்பாய் தெ. இ. தி. ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டது.

மணமகன் காலஞ்சென்ற திரு. S. R. ஸ்பென்சர், பிரவுன் வீதியில் வதியும் திருமதி ஸ்பென்சர் ஆகியோரின் புதல்வன். மணமகள் மானிப்பாயைச் சேர்ந்த திரு. C. N. மேதர், திருமதி மேதர் ஆகியோரின் புத்திரி.

சபைக்குரு கனம் Sam தம்பு அவர்கள் ஆராதனையை நடத்தினார்கள். கனம் N. W. G. சுகுணராஜா அவர்கள் உதவி புரிந்தனர். மெதடிஸ்த சபையின் வடபகுதி சினட் சங்கத் தலைவரும், பரி. பேதுரு தேவாலயக் குருவுமான கனம் H. R. S. ஜெயசந்திரன் அவர்கள் மணமக்களுக்கான நல்லுபதேசம் செய்தனர். உறவினரும் நண்பருமாக ஏராளமானோர் ஆராதனையிற் சமுகமளித்தனர்.

— நி-ர்.

* * *

## மேதர் - இராசநாயகம்

லண்டன் இஸ்ரியானியா நீல்சன் ஸ்தாபனத்தில் பொறியியலாளராகக் கடமையாற்றும் திரு. ஜெயந்தா மேதர் அவர்களுக்கும் செல்வி மோகனா இராசநாயகம் அவர்களுக்குமான பரிசுத்த மெய் விவாக ஆராதனை ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி பிற்பகல் 3-30 மணிக்கு லண்டனிலுள்ள பற்னி மெதடிஸ்த தேவாலயத்தில் நடத்தப்பட்டது.

மணமகன் மானிப்பாய் "பொனிங்ரன்" இல்லத்தைச் சேர்ந்த திருமதி விக்ரர் மேதர், காலஞ்சென்ற திரு. விக்ரர் மேதர் ஆகியோரின் புதல்வன். மணமகள் மானிப்பாய்ச் சபையைச் சேர்ந்தவர்களும் கொக்குவில், காங்கேசந்துறை வீதியில் வதிபவர்களுமான திரு. A. R. இராசநாயகம் தம்பதிகளின் புத்திரியாவர்.

— நி-ர்.

*EDITORIAL*

## Sri Lanka In An Asian Perspective

The visit of our Prime Minister to Asian countries on the eve of important political developments at home has been, in our view quite opportune.

"A guest sees more in an hour than a host in a year" runs an old Polish proverb. Prime Minister Premadasa would have, we are sure, during his sixteen-day visit seen more of the Asian scene than what was visible to the Asian rulers.

He would have also had an opportunity for self-reflection on some of our national problems, as he set them against a political scenario where conflicts often smoulder in more serious dimensions than in Sri Lanka.

President Ferdinand Marcos of the Phillipines in an emotional ceremony only three months ago at Malacanang Palace issued Proclamation 2045 which ended, according to him eight years and four months of Martial Law. [The elections in the Phillipines are scheduled for 1984.]

But as an observer put it, it was "the shell of Martial Law" that was removed. All the president's powers from A to Z remain in terms of Amendment Six of the 1973 Constitution.

The army has been asked to continue to tackle all politically-motivated crimes while the police will pick-up the criminal cases that will go before the civil courts.

This means in effect that Martial Law has been lifted for thieves and brigands but will continue to be in force for anti-Marcos political activists.

As for the media net work, the financial outlay (estimated at US 12.8 million dollars) to start a Manila Daily, is too great a risk for any independent private investor.

President Marcos, welcoming the Pope at Manila Airport in February this year spoke of political dissidents with 'strange secular ideologies' who advocated violence. But the Pope spoke out that very afternoon of the temptation of governments to suppress the rights of people.

"Any apparent conflict between the needs of security and those of the fundamental rights of citizens." the Pope said "must be resolved according to the principle that the social organisation exists only to preserve man and his dignity."

Indonesia, which has the fifth largest population in the world is an Asian paradox where, with all its vast development projects (we note that President Suharto has agreed to supply petroleum to Sri Lanka), the country remains poor.

Foreign investors may be attracted by the county's siren song. But its 300 ethnic groups who speak over 250 distinct languages live in the backwoods.

Political conditions in Sri Lanka are not of course in many ways identical with those in other Asian countries. Religious freedom, freedom of the Press, freedom of private enterprise and now our freedom to "devolve", underscore our commitment to democratic ideals both at the national as well as at the grass root level.

But democracy, like many of our metals in use, cannot bear the imprint of eternity unless every care is taken to preserve it through all kinds of weather and from the ravages of *corrosives*.

A potent 'corrosive' of democracy in the Asian political scene is what a writer describes as "a marriage of convenience."

The contracting parties in this "marriage" are the country's bureaucracy and the ruling party "*he* owns a luxury car and *she* owns a petrol station" [We note that in Sri Lanka now, many petrol stations, as their name boards denote, are owned by women.]

The United National Party in Sri Lanka has offered every opportunity for Private enterprise to team up with the state beginning from public transport to medical education. One of the latest moves of the government is to form *Joint-stock Companies* in the sphere of agricultural development.

Laudable as these "marriages of convenience" are, great care should be taken by the state to see that the country is not turned into an elysium for careerists and opportunists who would be tempted to exploit the State without compunction in return for *political advantages*.

In our editorial columns in the last two weeks, we have drawn atttention to the responsibility that now rests on the ruling party as well as other parties in this country to regard the Election to the Development Councils with an uncommon measure of *integrity*.

The DDC Bill has been passed in Parliament. But our problem does not end there. "The war is won, but the battle is not done."

## SOME THOUGHTS ON EVANGELISM

— Mark Gibbs —

1. Without religious ostentation or faddiness, we surely need to confess ourselves as Christians to our friends and neighbours and visitors. I am all for a modest, thoughtful Christian "presence" in modern society: we have so much to unlearn about past triumphalist and intolerant attitudes. But I have never been comfortable with those, especially in student groups, who have asked for an *anonymous* Christian presence. We can all smile at the Victorian home with the large black Bible prominently displayed in the best parlour, and an appropriate text hung in the pantry; but I am dismayed to visit many Christian homes these days and find almost no symbol, no picture, no cross or crucifix which may show, even in the quietest way, that here is a Christian family. Again, the virtual dissappearance of grace at meals or any kind of family prayers has been, in my opinion, a distinct loss. (American and continental families have been much wiser in this respect). Nobody can expect long family petitions in the mad morning break-fast rush, but surely once a week, may be at Sunday dinner, a family can give thanks (and certainly need not ask a visiting clergymen to do it for them).

None of this is for spiritual pride, or to suggest that we as Christians are "better" than our neighbours. It is just to acknowledge that we are not ashamed of our faith. Indeed, in matters of family ceremonies and traditions, our Jewish friends are so much wiser than we have been in recent years.

**Both Personal Spirituality and Political Involvement**

2. In the last decade, the old tensions between "social justice" Christians and "personal witness" Christians have both increased and slackened. They have a little diminished because a notable number of Evangelicals all over the world have now joined many other believers in accepting the essential social dimensions of the Gospel. and in condemning the kind of evangelist who preaches individal salvation — for instance in South Korea or a plush Birmingham suburb — without emphasising also that a commitment to Jesus Christ means also a costly commitment to the poor, the tortured and the oppressed. But sometimes such tensions have increased, partly, if I may speak frankly, because many Christians who are passionately dedicated to social change have much underemphasised questions of personal identity and commitment, of individual beliefs and doubt, and of spiritual support in suffering and death.

I believe that we can now work out some of these tensions more calmly and helpfully than for many past years, especially if we bring together Christians from different Churches and traditions. It is surely clear that a style of evangelism is defective if it leaves us in comfortable and untroubled life styles. It is also evident that a passionate involvement in one social cause after another—Kampuchea, disarmament, even whales — is not in itself a completely satisfactory way in which to grow into mature Christian living. We need also opportunities for reflection, for worship and for the development of both a personal and a communal spirituality.

3. Though of course glib talk about God and Jesus and salvation will be pretty useless if our ways of living contradict our verbal commitment, there is a responsibility laid upon us to be "ready always to give an answer" about the hope that is in us. (1 Peter 3-15) It is not a matter of shouting at indifferent shopping crowds from a soap box; it is a question of being ready to try to explain what we beleive when people ask. And people do ask, on matters as diverse as marriage, death. drugs, personal spending, Christian Aid, nuclear war and prayer. Sometimes they are genuinely, though a little uncomfortably, interested in why we have these funny "religious" attitudes. Quite often (more often than we recognise) they have some sincere though perhaps only semi-Christian beliefs and longings, which we can help them with. These days so many more people say their prayers and try to "be a Christian" have never committed themselves to active Church membership. We have a real obligation to be able to help sensibly in such conversations.

Such a readiness to talk about our faith must include an openness to say "I don't know" or "I frankly don't understand that" when necessary. To witness to the essentials of the Gospel is not to offer a blind faith in all the dogmas and traditions of Christian history or to accept uncritically all those tracts of the Catholic Truth Society. Christians are seekers and pilgrims, and we ask others to join us on the journey. We simply don't have all the answers, though we are not ashamed to claim that God has given us some signs of his purposes for us.

— *Audenshaw Papers*

## Social Issues between Geneva & Rome

A newly constituted consultative group in future will deal with social concerns of common interest between the World Council of Churches and the Roman Catholic Church.

The creation of the consultative group was decided at a session of the Joint Working group (JWG) of the WCC and the Roman Catholic Church in Rome.

The JWG wants to ensure that social concerns remain on the agenda in spite of the demise from the end of 1980 of SODEPAX (Committee on Society, Development and Peace).

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./100125/81*

Printed for the Jaffna Diocese of the Church of South India by Mr. Philip Matthews residing at 19, Lady of Miracles East Road, Jaffna, and published by Mr. Alvappillai Rajasingam, 330, Navalar Road Jaffna, at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 8th May, 1981.